# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 10 | தமிழ் இலக்கியநயம் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ...........................................................................

### பகுதி I

***(01) 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.***

*01.* **புத்தகமும் நானும் சையோகம் புரிந்ததொரு வேளை தன்னில்.**

அ) இச் செய்யுட் பகுதி இடம்பெறும் இலக்கியம் யாது?

...........................................................................................

ஆ) சையோகம என்பதன் பொருள் யாது?

...........................................................................................

*02.* **இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம் இலகுவது புலவர் தரு சுவடிச்சாலை.**

அ) சுவடிச்சாலை என்பது யாது?

...........................................................................................

ஆ) அது இலகுவது யாது?

...........................................................................................

*03.* **பத்தி எழுத்துக்களின் காரணமாக கவிக்கோ அப்துல் ரஹ்மான் பத்தியாளர் என அழைக்கப்படுகின்றார்?**

அ) பத்தி எழுத்து என்றால் என்ன?

...........................................................................................

ஆ) "வலிமையானவையே வாழும்" எனக் கூறியவர் யார்?

...........................................................................................

*04.* **கொடிய உள்ளம் படைத்தவர்களைக் கூட இசை மென்மையாக்கி விடுகின்றது.**

அ) "ஆறலை கள்வர்படை விட அருளின்

மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை" எனும் பாடலைப் பாடியவர் யார்?

...........................................................................................

ஆ) இங்கு கூறப்பட்ட பண் யாது?

...........................................................................................

*05.* **அயலும் புடையும் வாழ வேண்டும்.**

அ) நாட்டார் பாடல் என்பதன் மறு பெயர்களைத் தருக?

...........................................................................................

அ) மருத்துவிச்சி என்பவள் யார்?

...........................................................................................

(4 x 5 = 20 புள்ளிகள்)



kalvi.lk

**(02) கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து தரப்பெற்ற வினாக்களுக்கு விடை எழுதுக.**

அவன் குழந்தைப் பருவத்தில் தொட்டிலாகி, நடை பழகும் பருவத்தில் நடை வண்டியாகி, பள்ளிப்பருவத்தில் ஏடுகளாகி, மணப்பருவத்தில் கட்டிலாகி, கிழப்பருவத்தில் ஊன்று கோலாகி, இறந்த பிறகும் பாடையாகி, சிதையிலும் உடன்கட்டை ஏறி அவன் சாம்பலோடு, சாம்பலாகிக் கலந்து மனிதனுக்காகவே தங்களை முற்றிலும் அர்ப்பணம் செய்யும் மரங்கள்.

மனிதனின் தாகத்திற்குப் பானம் தந்து, பசிக்கு உணவூட்டி, உடுத்த உடையாகி, வசிக்க வீடாகி, நோய்க்கு மருந்தாகி, அவன் பயணத்துக்கு சக்கரங்களாகி, அவன் வேலைகளில் கைகளுக்குக் கைகளாகி, அவன் சுவாசத்திற்காக காற்றைச் சலித்துக் கொண்டு, அவனுக்காக மேகங்களைக் கெஞ்சிப் பிச்சை கேட்டு, ஓ! மரங்கள் மட்டும் இல்லையென்றால் மனிதன் வாழ்ந்திருப்பானா?

> சரித்திரச் சாலையைப் பார்க்கிறேன். அங்கு மரங்கள்
> அதோ! போதி மரங்கள்; பாவவெயில் மறைக்கும் அறக்குடைகள்.
> அதோ! காவல் மரங்கள்; ஊர்ப் பொது மன்ற மரங்கள்;
> பொருட்பாலின் அத்தாணி மண்டபங்கள்,
> அதோ! வசந்த மரங்கள்; மன்மதனின் அம்பறாத் தூணிகள்
> வாலிபங்கள் பள்ளியறைப் பாடம் கற்கும் பள்ளியறைகள்
> அதோ! கல்லால மரங்கள் வீட்டு நெறிக்குக் கைகாட்டும் மரங்கள்

மனிதனைப் பார்க்கிறேன் அவன் மரத்திலிருந்தே கோடதிக் காம்பு செய்து கோண்டிருக்கிறான். தருகின்ற தருக்களின் தயவில் வாழ்ந்தாலும் மனிதன் நன்றி கெட்டவனாகவே இருக்கின்றான்.

01. இப்பந்தி உணர்த்தும் பிரதான விடயம் யாது?

.....................................................................................................

.....................................................................................................

(4 புள்ளி)

02. மரங்கள் மனிதனுக்கு எவ்வகையில் பயனளிக்கின்றன?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(6 புள்ளி)

03. சரித்திரச் சாலையிற் காணப்படும் மரங்கள் எவை?

.....................................................................................................

.....................................................................................................

(4 புள்ளி)

04. மனிதனின் நன்றி கெட்டத்தனம் இப்பந்தியில் வெளிப்படும் விதத்தை விளக்குக.

.....................................................................................................

.....................................................................................................

(6 புள்ளி)



kalvi.lk

## பகுதி – II

**பகுதி II இல் 1ஆம் வினாவுக்கும் ஏனைய வினாக்களில் எவையேனும் 2 வினாக்களுக்கும் மொத்தம் மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

***01. பின்வரும் கவிதையை வாசித்து அதன்கீழ் தரப்பட்டள்ள வழிகாட்டல் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்த குறைந்த பட்சம் 150 சொற்களில் எழுதுக.***

தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளைதன்னில்
இனித்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்
இசை கேட்டேன்! மணம் மோந்தேன்! சுவைகள் உண்டேன்
மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகா சோதியிற் கலந்த தெனது நெஞ்சம்!
சனித்ததங்கே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மிகப் பெரிது கண்டீர்!

மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப் போல விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவந்தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்

தழிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப் போல் எங்கும் வேண்டும்
தமிழிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிலாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்
அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூல்கள்
அழகியனவாம் உரை நடையில் அமைந்த நூல்கள்
சுமை சுமையாய்ச் சேகரித்துப் பல்சுவைசேர்
துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்



kalvi.lk

நாலைந்து வீதிகளுக்கு ஒன்று வீதம்
நல்லதுவாய் வசதியதாய் இல்லம் வேண்டும்
நூலெல்லாம் முறையாக ஆங்கமைத்து
நொடிக்கு நொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
குவிற்திருக்க வகை செய்து தருதல் வேண்டும்
மூலையிலோர் சிறு நூலும் புதுநூலாயின்
முடிதலிலே சுமந்து வந்து தருதல் வேண்டும்.

வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க் கிருக்கை தந்தும்
ஆசித்த நூல் தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதையுரைத்தும் நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்ற தொண்டிழைப்பீழ்! சமுதாயச்சீர்
மறுமலர்ச்சி கண்டதென் முழக்கஞ் செய்வீர்

அ) புத்தகத்துடன் இணைந்த போது கிடைத'த இன்பத்தை கவிஞர் எவ்வாறு விபரிக்கின்றார்?

ஆ) புத்தகசாலையால் மனிதர்கள் அடையும் நன்மைகள்.

இ) ஒரு நூல் எவ்வாறு அமைய வேண்டும்.

ஈ) நூலகத்தில் பணிபுரிவோரின் பண்பு.

உ) கவிதையில் காணப்படும் கவிச்சிறப்பு. (30 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் விரும்பிய இரு வினாக்களுக்கு விடை எழுதுக.

01. மென்மையே வாழும் என்ற பத்தி எழுத்தில் மென்மை பற்றியதும்வன்மை பற்றியதுமான ஒப்பீட்டிதுள்ள சிறப்பை விளக்குக.

(15 புள்ளிகள்)

02. மருத்துவிச்சி வாழ்த்துப் பாடலில் மருத்துவிச்சியின் மனப்பாங்கு பற்றிய உமது கருத்தினைத் தெளிவுபடுத்துக.

(15புள்ளிகள்)

03. மருத்துவிச்சிப் பாடலில் வரும் கிராமிய மண்வாசைன அழகியலுணர்வு என்பவற்றைத் தெளிவுபடுத்துக.

(15 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page